"ஏழ்மையும், அறியாமையும் கனவுகளை
அழித்துவிட அனுமதியோம்..."

# UNIT - 7

# இந்திய தேசிய இயக்கம்



## TNPSC - GROUP I, II, II A, IV



திண்ணை
பயிற்சிப் பட்டறை, தேனி

9940970325 Thinnai Theni Thinnai Competitive Exam thinnnaimail@gmail.com
Thinnai Study Circle 9361482208

ஏழ்மையும் அறியாமையும் கனவுகளை அழித்துவிடஅனுமதியோம்...

# திண்ணை

பயிற்சிப் பட்டறை, தேனி

வழங்கும்

# இந்திய தேசிய இயக்கம்



திண்ணை பயிற்சி பட்டறை, 57A, ஜவகர் மெயின்ரோடு, NRT நகர், தேனி

9940970325 Thinnai Competitive Exam Thinnai Theni thinnaimail@gmail.com

Thinnai Study Circle 9361482208

# திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!

இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!

உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!

நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!

இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!

இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!

தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!

கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!

சாதி மதம் பேதம் ஒழிப்போம்!

பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!

லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!

லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!

அறத்தின் வழி நின்று மனிதம் போற்று!

# இந்திய தேசிய இயக்கம்


| S.No | பொருளடக்கம் | Page No |
|---|---|---|
| 1 | தேசிய மறுமலர்ச்சி | 2 |
| 2 | ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான தொடக்க கால எழுச்சிகள் | 83 |
| 3 | இந்திய தேசிய காங்கிரஸ் | 140 |
| 4 | தலைவர்கள் உருவாதல் | 155 |
| 5 | விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு நிலைகள்: அகிம்சை முறையின் வளர்ச்சி | 195 |
| 6 | விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு நிலைகள் புரட்சிகர இயக்கங்கள் | 270 |
| 7 | வகுப்புவாதம் மற்றும் தேசப்பிரிவினை | 287 |

அலகு 4

# தலைவர்கள் உருவாதல்

## 4.1.மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி

**காலம்**: 02.10.1869-30.01.1948

**பிறப்பு**: போர்பந்தர், குஜராத்

**பெற்றோர்**: காபாகாந்தி (அ) கரம் சந்த் காந்தி - புத்திலிபாய்

**வாழ்க்கை**

- காந்தி இளம் வயதில் படித்த நூல் - சிரவணண் பிதுர்பக்தி
- காந்தி 'அரிச்சந்திரன்' நாடகத்தை பார்த்து உண்மையே பேச வேண்டும் என்பதை உணர்ந்தார்.
- 1888-ல் பாரிஸ்டர் பட்டம் வாங்க லண்டன் பயணம்
- 1891-ல் பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.
- 1893 (ஏப்ரல்) - தென் ஆப்பிரிக்கா பயணம் சென்றார்.
- தென்னாப்பிரிக்காவில் தான் முதன் முறையாக அவர் இனவெறியை எதிர்கொண்டார்.
- டர்பனில் இருந்து பிரிட்டோரியாவுக்கு ரயில் பயணம் மேற்கொண்ட போது பீட்டர்மாரிட்ஸ்பர்க் ரயில் நிலையத்தில் முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்(1893).
- 1892 -ல் தென்னாப்பிரிக்கா சென்றார். 1894ல் "நேட்டால் இந்திய காங்கிரஸ்" (Natal Indian Congress) என்ற அமைப்பை நிறுவி ஆங்கிலேயரின் அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிராகப் போராடினார்.
- தென் ஆப்பிரிக்காவில் காந்தி வெளியிட்ட நூல் 'இந்தியன் ஒபீனியன்'(Indian opinion)
- காந்தியடிகளுக்கு தாக்கம் ஏற்படுத்திய புத்தகம்
  1. டால்ஸ்டாய் -ன் கடவுளின் அரசாங்கம் உன்னில் உள்ளது (The Kingdom of God is within you)
  2. ஜான் ரஸ்கின் -ன் அண்டு திஸ் லாஸ்ட்(Undo this last)
  3. தாரோவின் சட்டமறுப்பு
- ரஸ்கன் மீதுள்ள ஈர்ப்பால் பீனிக்ஸ் குடியிருப்பையும்(1905) டால்ஸ்டாய் பண்ணையையும்(1910) நிறுவினார்.
- 1915 - ஜனவரி 9 - இந்தியா திரும்பினார்(மும்பை) (NRI day)
- 1915-ல் காந்தி இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்தார்.
- 1917 - சம்ரான் சத்தியாகிரகம்

- 1918 - கேதா சத்தியாகிரகம்(Tax Scrabbing in Gujarat)
- 1918 - அகமதாபாத் மில்தொழிலாளர்கள் போராட்டம்
- 1919 பிப்ரவரி - காந்தியடிகள் முதன் முறையாக சென்னைக்கு வந்தார்.
- பாரதியை சந்தித்த காந்தி அவரை இந்தியாவின் சொத்து என்று அழைத்தார்.
- 1919 - கிலாபத் மாநாடு தலைமை - டெல்லி.
- 1920 - ஒத்துழையாமை இயக்கம்-காந்தி தலைமையில் நடந்த முதல் அகில இந்திய போராட்டம்
- 1921 செப்டம்பர்-மதுரையில் உள்ள திண்டுக்கல்-சின்னாளம்பட்டிக்கு வருகை புரிந்த போது, விவசாயிகளை கண்டு அரை ஆடை உடுத்தினார்.
- 1922 - ஒத்துழையாமை இயக்கம் திரும்ப பெறப்பட்டது.
  (1922-பிப்ரவரி 5 - சௌரி சௌரா நிகழ்ச்சியை தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கம் திரும்ப பெறப்பட்டது).
- 1924 - காங்கிரஸ் தலைவராக பதவி வகித்த ஒரே மாநாடு, கர்நாடகாவில் - பெல்காம் என்ற இடத்தில் நடந்தது.
- 1930 - சட்ட மறுப்பு இயக்கத்தை தொடங்கினார்.
- 1930(மார்ச் 12 - ஏப்ரல் 6) சட்ட மறுப்பு இயக்கத்தின் ஒரு பகுதியான உப்பு சத்தியாகிரக போராட்டம் காந்தி தலைமையில் நடைபெற்றது.(சபர்மதி ஆசிரமம்) - தண்டி வரை - 400 கி.மீ - 78 நபர்கள் பங்கேற்றனர். ஒரே பெண்மணி - சரோஜினி நாயுடு.
- 1931(மார்ச் 5) - இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் காங்கிரஸ் உறுப்பினராக பங்கேற்றார்.
- 1932 (ஆகஸ்ட் 16)-ல் மெக்டோனால்டு நன்கொடையை(Communal Award) - எதிர்த்து சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கினார்.
- 1932 - பூனா ஒப்பந்தம்(காந்தி - அம்பேத்கர் இடையே ஏற்பட்டது) (செப்டம்பர் 24, 1932, எரவாடா சிறையில்)
- 1937 - சென்னை இலக்கிய மாநாடுக்கு தலைமை வகித்தார். அப்பொழுது உ.வே.சாமிநாதரின் தமிழ் பேச்சைக் கண்டு வியந்தார்.
- 1939 - திரிபுரா காங்கிரஸ் மாநாட்டின் - காங்கிரஸ் தலைவருக்கான தேர்தலில் - சுபாஷ் சந்திரபோஸை எதிர்த்து தனது வேட்பாளரான - பட்டாபி சீத்தாராமையாவை நிறுத்தினார்.
- 1940-இல் தனிநபர் சத்தியாகிரகம் தொடங்க காரணமாக இருந்தார்.
- 1942-இல் கிரிப்ஸ் தூதுக்குழுவின் அறிக்கையை ‘திவாலாகிக் கொண்டிருக்கும் வங்கியின் பின்தேதியிட்ட காசோலை’ (Post Dated Bank Cheque) என வர்ணித்தார்.
- 1942 - ஆகஸ்ட் 8ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத் தீர்மானத்தை கொண்டு வந்து - அகில இந்திய அளவில் போராட்டம் வலுப்பெற காரணமாக இருந்தார்.
- 1942 - ஆகஸ்ட் 9 - காலை 5 மணியளவில் கைது செய்யப்பட்டார்.

- 1944 - மே 5 விடுதலை செய்யப்பட்டார்.
- 1944 - ராஜாஜியின் CR திட்டத்தினை முகமது அலி ஜின்னாவுடன் விவாதம் நடத்தினார்.(இந்தியா-பாகிஸ்தான் பிரிவினை திட்டம்)
- 1947 - ஆகஸ்ட் 15, இந்தியா சுதந்திரம் அடைந்தது.(கடைசி வரை இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையை எதிர்த்தார். இறுதியாக வேறுவழியின்றி பிரிவினைக்கு ஒப்புக் கொண்டார்.)
- சமூக நல்லிணக்கத்திற்காக காந்தியின் கடைசி உண்ணாவிரத போராட்டம்(1948-ஜனவரி 13-17 வரை).
- 1948, ஜனவரி 30 - காந்தி 'நாதுராம் கோட்சே' -வால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- காந்தியின் ஓவியத்தை வரைந்தவர் 'அதுல் டோலியா'.
- காந்தியின் அந்தரங்க செயலாளர் - மகாதேவ் தேசாய்.

**பத்திரிக்கைகள்**

1. நவஜீவன் - குஜராத்தி மொழி - 1919
2. யங் இந்தியா - ஆங்கில மொழி
3. ஹரிஜன் பத்திரிக்கை - 1933
4. இந்தியன் ஒபீனியன் தென் ஆப்பிரிக்காவில் நடந்தது.

**புத்தகங்கள்:**

- Pathway to God
- Hindu Swaraj - 1909

**காந்தியின் முக்கிய வாசகம்**

- 'செய் அல்லது செத்துமடி' (Do or Die - 1942)
- 'இறுதி வரை போராடு' (Flight to Finish - 1942)
- வெள்ளையனே வெளியேறு

- கிராமங்கள் இந்தியாவின் முதுகெலும்பு.
- நான் ஆங்கிலேயத்திற்கு எதிரானவன் அல்ல. ஆங்கலேயர்களுக்கு எதிரானவன் அல்ல. ஆனால் பொய்மைக்கு எதிரானவன் மோசடிக்கு எதிரானவன். அநீதிக்கு எதிரானவன்.
- காந்தியின் **அரசியல் குரு - கோபால கிருஷ்ண கோகலே**.
- காந்தியை **மகாத்மா** என அழைத்தவர் - **ரவீந்திரநாத் தாகூர்.**
- காந்தியைத் **தேசத்தந்தை என்றவர் - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.**
- பட்டேலை '**சர்தார்**' என்று அழைத்தார்.
- காந்தியின் சமாதி உள்ள இடம் - 'ராஜ்கோட்'

## 4.2.ஜவஹர்லால் நேரு

**காலம்**: 14.11.1889-27.05.1964

**பிறப்பு**: ஆனந்தபவன், அலகாபாத்

**பெற்றோர்**: மோதிலால் நேரு, சொரூபராணி

**தந்தை**: சுயராஜ்ஜிய கட்சியின் நிறுவனர்

**சிறப்பு**: நவீன இந்தியாவின் சிற்பி, ரோஜாவின் இராஜா, இந்தியாவின் ஆபரணம்

**வாழ்க்கை**

- 1912-இல் பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.
- 1916-லக்னோ காங்கிரஸ் மாநாட்டில் காந்தியை முதன் முதலாக சந்தித்தார்.
- 1916-இல் கமலா கவுல் என்பவரை மணந்தார்.
- 1917-நவம்பர் 19 அன்று இந்திரா பிரியதர்ஷினி பிறந்தார்.
- 1919-இல் கிஷான் சபையின் துணைத் தலைவரானார்.
- 1919-1932-வரை **'The Independent'** என்ற செய்தித்தாளை நடத்தினார்
- 1920-காந்தி நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கெடுத்ததற்காக 1921ல் நேரு முதல் முறையாகச் சிறைக்கு சென்றார்.
- வாழ்நாளில் 9 வருடங்கள் சிறையில் கழிக்க வேண்டிவந்தது. சிறையில் இருந்த நாட்களில், நேரு **உலக வரலாற்றின் காட்சிகள்(1934). சுயசரிதை(1936)** மற்றும் இந்தியாவின் கண்டுபிடிப்பு ஆகிய நூல்கள் எழுதினார்.
- 1923-இந்திய தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர்.
- 1929-லாகூர் காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமைத் தாங்கினார். 'பூரண சுயராஜ்ஜியம்' தீர்மானத்தை நிறைவேற்றினார்.
- 1937-பைய்ஸ்பூர் - காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமையேற்றார்.(கிராமத்தில் நடந்த முதல் மாநாடு).
- 1940-தனிநபர் சத்யாகிரகத்தை போது ஆச்சார்ய வினோபாவேவிற்கு அடுத்து இரண்டாவதாக கைது செய்யப்பட்டார்.
- **1942 வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது அகமது நகர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டார்.**
- சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக மௌண்ட்பேட்டன் பிரபுவால் பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.
- **நேஷனல் ஹெரால்டு** என்ற பத்திரிக்கையை நடத்திவர்.

**நேருவின் பொன்மொழிகள்**

- 1935ம் ஆண்டு இந்தியச் சட்டம் - ஒரு அடிமைப்பட்டயம்.
- **விதியோடு செய்து கொண்ட ஒப்பந்தம்(இந்தியா-பாகிஸ்தான் பிரிவின்போது)**

- உலக மக்கள் அனைவரும் தூங்கிக் கொண்டிருக்கும் போது இந்தியா விழித்துக் கொண்டது.(சுதந்திரத்தின் போது)
- காலம் பொன் போன்றது.
- **நம் வாழ்வில் ஒளி மறைந்து எங்கும் இருள் சூழ்ந்து விட்டது(காந்தி மறைவின் போது)**
- வேற்றுமையில் ஒற்றுமை.

**படைப்புகள்**

1. உலக வரலாற்றின் பார்வை(1934) (Glimpses of World History)
2. தி யுனிட்டி ஆப் இந்தியா(1941) (The Unity of India)
3. தி டிஸ்கவரி ஆப் இந்தியா(1946) (The discovery of India)
4. இவரின் சுயசரிதை "Toward Freedom" (1936)
5. இன்டிபென்டன்ஸ் அண்ட் ஆ.ஃ.ப்டர் (Independence and After)
6. இந்தியா அண்ட் வோர்ல்ட் (India and World)

## 4.3.பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர்

**காலம்**: 14.04.1891-06.12.1956

**பிறப்பு**: அம்பவாதே, இரத்தினகிரி மாவட்டம். மகாராஷ்டிரா

**பெற்றோர்**: ராம்ஜி சக்பால்-பீமாபாய்

**தந்தை**: இராணுவப்பள்ளி ஆசிரியர்

**ஆசிரியர்**: மகாதேவ் அம்பேத்கர்

**வாழ்க்கை**

- **சதாராவில்** உள்ள பள்ளியில் தமது கல்வியைத் தொடங்கினார்.
- 1904 ஆம் ஆண்டு, இவருடைய குடும்பம் மும்பைக்குக் குடிபெயர்ந்தது. இங்கு **எல்பின்ஸ்டன்** உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார்.
- 1907 ஆம் ஆண்டு தமது பள்ளிப்படிப்பை முடித்தார். பிறகு, பரோடா மன்னரின்(சாயாஜிராவ்) உதவியுடன் மும்பைப் பல்கலைக்கழகத்தில் படித்து 1912 ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார்.
- பரோடா மன்னர் சாயாஜிராவ் உதவியுடன் உயர்கல்வி கற்க அமெரிக்கா சென்றார்.
- கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பொருளாதாரம், அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங்களைக் கற்றார்.
- உயர் கல்வி பெறுவதற்காக அமெரிக்கா சென்ற முதல் இந்தியர் ஆவார்.
- 1915 இல் பண்டைக்கால **இந்திய வணிகம்** என்ற ஆய்விற்காக **முதுகலைப் பட்டம்** பெற்றார்.
- 1920 ஆம் ஆண்டு பொருளாதாரப் படிப்பிற்காக **இலண்டன்** சென்றார்.

- 1921 ஆம் ஆண்டு முதுநிலை அறிவியல் பட்டமும் 1923 ஆம் ஆண்டு **ரூபாய் பற்றிய பிரச்சனை** என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக்காக **முனைவர் பட்டமும்** பெற்றார். அதே ஆண்டில் சட்டப்படிப்பில் **பாரிஸ்டர் பட்டமும்** பெற்றார்.
- 1924 ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக **ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை (பஹிஷ்கிரித் ஹிடாகரினி சபை - Bahishkrit itakarini sabha)** என்ற அமைப்பை நிறுவினார்.
- ஒடுக்கப்பட்ட பாரதம் (பிரபுக் பாரத்) என்னும் இதழை 1927 ஆம் ஆண்டு துவங்கினார்.
- ஊருணிகள் மற்றும் கிணறுகளில் தீண்டாமை கொடுமை உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு தரவேண்டிய அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர **மஹத் சத்தியாகிரகம்**(1927) என்ற அமைப்பைத் தொடங்கினார்.
- **1927 ல் சமாஜ் சமாத சங்கம்** என்னும் அமைப்பை உருவாக்கினார். 1930 ஆம் ஆண்டு நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தினை நடத்தி வெற்றி கொண்டார்.
- 1930 நவம்பர் - **முதலாவது வட்டமேசை மாநாடு**(இங்கிலாந்து) - தமிழகத்தைச் சேர்ந்த இரட்டைமலை சீனிவாசனுடன் கலந்துக்கொண்டார்.
- இவர் மூன்று வட்டமேசை மாநாடுகளிலும் கலந்துக்கொண்டார்.
- மக்கள் கல்வி சமூகம் (People Education Society) என்ற கல்விக் குழுமத்தை ஏற்படுத்தினார்.
- 1931 செப்டம்பர் 24 - காந்தி அம்பேத்கர்(பூனா ஒப்பந்தம்)
- **மூக் நாயக்**(வாய்பேச முடியாதவர்களின் தலைவர்) - பத்திரிக்கை.
- சுதந்திரத் தொழிலாளர் கட்சியைத்(1937) தொடங்கித் தேர்தலில் போட்டியிட்டார். அவர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் பதினைந்து பேரும் வெற்றிபெற்றனர்.
- **பட்டியல் இனத்தவர் கூட்டமைப்பை** 1942 இல் தொடங்கினார்.
- 1924 முதல் 1946 வரை கவர்னர் ஜெனரல் நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இருந்தார்.
- 1942 - பாதுகாப்புத் துறை ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத அம்பேத்கர் தலைமையில் அவர் உட்பட ஏழுபேர் கொண்ட **அரசியலமைப்புச் சட்ட வரைவுக் குழு** உருவாக்கப்பட்டது.
- இலங்கையில் நடைபெற்ற புத்தத் துறவிகள் கருத்தரங்கில் கலந்துகொண்ட அவர், உலகப் பௌத்த சமய மாநாடுகளிலும் கலந்துகொண்டார்.
- 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் நாள் நாக்பூரில் இலட்சக்கணக்கான மக்களோடு புத்த சமயத்தில் தன்னை இணைத்துக்கொண்டார்.
- அவர் எழுதிய **புத்தரும் அவரின் தர்மமும்** என்னும் புத்தகம் அவரது மறைவுக்குப்பின் 1957 ஆம் ஆண்டு வெளியானது.
- **பாரத ரத்னா விருது** 1990 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

**பஞ்சாயத்துராஜ்-காந்தி(எதிர்) அம்பேத்கர்**

- அம்பேத்கரின் கருத்துப்படி, கிராமம் என்பது வகுப்பு வாதம், சாதியமைப்பு போன்ற கொடுமையான யதார்த்தத்தைக் கொண்டுள்ளன.
- இதனால் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்படும் நிலை உருவாகும் என்ற கருதினார்.
- ஆனால், சிறப்பான உள்ளாட்சி அரசாங்கத்தின் மூலமாக மட்டுமே மக்கள் அதிகாரம் செலுத்தமுடியும் என்பதை நாட்டு மக்கள் உணர்த்தும் வகையில் காந்தி தனது சமூக, அரசியல் முன்னெடுப்புகளை மேற்கொண்டார்.
- அம்பேத்கர் கருத்துப்படி "**கிராமங்கள் என்பது அறியாமை மற்றும் வகுப்புவாதத்தின் இருப்பிடம்**" என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.
- கிராமங்களில் உள்ள ஆதிக்கமும் செல்வாக்கும் கொண்ட சமுதாயங்கள் தங்கள் ஏகபோகத்தை நிலைநாட்டிக் கொண்டு இதர சமுதாயங்களுக்குக் குரல் இல்லாமல் செய்கிறார்கள் என்றார்.
- இதன் விளைவாக, அம்பேத்கர் தலைமையில் உருவாக்கப்பட்ட அரசமைப்பில் பஞ்சாயத்து ராஜ் என்ற சொல் கூட குறிப்பிடப்படவில்லை.
- ஆனால், இந்திய அரசமைப்பு சட்டம் பாகம் IV அரசுக்கொள்கை வழிகாட்டு நெறிகள் என்னும் பிரிவில் கிராம பஞ்சாயத்துக்களை உருவாக்குவதற்கான பொறுப்பினை மாநிலச் சட்டமன்றங்களுக்கு அளிக்கும் வகையில், ஒரு விதி கொண்டிருக்கப்பட வேண்டும் என்று காந்தியவாதிகள் வலியுறுத்தினர்.

**புத்தகங்கள் மற்றும் கட்டுரை**

1. பழங்கால இந்திய வர்த்தகம்(1915-ல் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப் படிப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை)
2. **இந்தியாவின் தேசிய பங்கீடு பற்றி வரலாறு மற்றும் பகுப்பாய்வு ஆய்வறிக்கை** (முனைவர் பட்டத்திற்காக சமர்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை)
3. **பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண நிதிகளின் மதிப்பீடு:** மாகாண ஏகாதிபத்தியத்தின் நிதிகள் பரவலாக்கம் பற்றிய ஓர் ஆய்வு.
4. **பிரிட்டிஷ் இந்தியாவின் மாகாண நிதி பரவலாக்கள்** - 1921- M.Sc. பட்டத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.
5. **ரூபாயின் பிரச்சனைகள்** - 1923 ல் லண்டன் பொருளாதார பள்ளி D.Sc. பட்டம் வழங்கியது.
6. **இந்தியாவில் குறைந்த நிலவுடமை மற்றும் தீர்வுகள்** - 1918ல் வெளியான கட்டுரை.
7. **இந்தியாவின் சாதிகள்** - 1916 - ஆராய்ச்சிக் கட்டுரை
   (இந்தக் கட்டுரைப் பின்னர் '**அரிய இந்தியப் புத்தகம்**' என்ற தொகுப்பில் பதிப்பிக்கப்பட்டது.)

**பொன்மொழிகள்**

- கற்பி, ஒன்றுசேர், புரட்சி செய்
- சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தைக் கற்றுக் கொடுக்கும் மதமே நான் விரும்புவது.

## 4.4.சுபாஷ் சந்திர போஸ்

**காலம்**: 23.01.1897-18.08.1945(இறந்ததாக கருதப்படும் நாள்)

**பிறப்பு**: கட்டாக், ஒரிசா

**பெற்றோர்**: ஜானநாத் போஸ்-பிரபாவதி தேவி

**சிறப்பு பெயர்**: நேதாஜி(காந்தியினால்)

**வாழ்க்கை**

- சிறு வயது முதலே விவேகானந்தர் மீது ஈடுபாடு உடையவராய் திகழ்ந்தார்.
- 1920 இல் பொதுப்பணி நிர்வாகத் தேர்வில் (ICS) வெற்றி பெற்றார்.
- அவர் 1921 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார். ஜவஹர்லால் நேருவுடன் இணைந்து இந்திய சுதந்திர லீக்கை (Independence for Indian League) ஏற்படுத்தினார்.
- தேசபந்து சி.ஆர். தாஸ், சுபாஷ் சந்திர போஸின் அரசியல் குருவாகத் திகழ்ந்தார்.
- நேதாஜி, இளைஞர்களும், பொதுமக்களும் தேசிய உணர்வு பெறக் காரணமாய் திகழ்ந்தார்.
- ஏராளமான இளைஞர்களை தேசிய இயக்கத்தில் பங்கு பெறச் செய்தார்.
- 1924-அவசரச் சட்டத்தின் மூலம் பிரிட்டிஷ் அரசு கொல்கத்தா மத்திய சிறையில் அடைந்தது.
- 1938 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் (ஹரிபுரா மாநாடு) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் 1939 ஆம் ஆண்டு திரிபுரா மாநாட்டிலும் காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1939-ல் அவர் பார்வர்டு பிளாக் கட்சி மற்றும் கிசான் சபையைத் தொடங்கினார்.
- 1939 ஆகஸ்டில் காங்கிரஸின் அனைத்துப் பொறுப்புகளிலும் இருந்தும் விடுவிக்கப்பட்டார்.
- பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு, இந்தியா மீது அந்நாடுகளின் அனுதாபத்தைப் பெற்றார். அவர் சிறிது காலம் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார்.
- அவர் ஆப்கானியர் போல மாறுவேடமிட்டு, இந்தியாவிலிருந்து தப்பி ஜெர்மனியை அடைந்து, ஹிட்லரைச் சந்தித்து உதவி கோரினார்.
- பின்னர் 1942 ஆம் ஆண்டு பர்மாவிற்கு சென்றார். ஜப்பானியர்களால் பர்மா ஆக்கிரமிப்பட்டது.
- அச்சமயத்தில் பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து ஏராளமான இந்தியக் கைதிகளை ஜப்பான் கைப்பற்றியது.

- ஜப்பானிய அரசாங்கத்துடன் கூட்டு சேர்ந்து சுபாஷ் சந்திரபோஸ் இந்தியர்களுக்காக இந்திய தேசிய இராணுவத்தை அமைத்தார். 1943-ல் சிங்கப்பூர் சென்றார்.
- அங்கு இந்திய விடுதலைக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை இராஷ்பிகாரி போஸ், சுபாஷ் சந்திர போஸிடம் ஒப்படைத்தார்.
- 1943ல் சிங்கப்பூரில் ஆசாத் ஹிந்த் ∴பவுஜ் என்று அழைக்கப்பட்ட இந்திய தேசிய இராணுவத்தின் தளபதியாக சுபாஷ் சந்திரபோஸ், விளங்கினார்.
- நேதாஜி என்றால் தலைவர் என்று பொருள். இந்திய தேசிய ராணுவத்தின் பெண்கள் பிரிவு, தமிழ்நாட்டைச் சேர்ந்த கேப்டன் லஷ்மி தலைமையில், ஜான்சி ராணி பெயரில் அமைக்கப்பட்டது.
- இந்திய தேசிய ராணுவம், ஆங்கிலேயருக்கு எதிராக இந்திய விடுதலைக்குக் கடுமையாக போராடியது.
- ஜெய்ஹிந்த் என்ற சுபாஷ் சந்திரபோஸின் முழக்கம் புகழ் பெற்ற முழக்கமாக மாறி, இந்தியா முழக்க எதிரொலித்தது.
- டெல்லியை நோக்கிச் செல் (Dilli Chalo) என்ற மற்றொரு புகழ் பெற்ற முழக்கமும் போஸினுடையதாகும். இரண்டாம் உலகப்போரில் 1945ம் ஆண்டு ஜப்பான் சரணடைந்தது.
- இந்திய தேசிய இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டனர். நேதாஜி பாங்காக்கிலிருந்து டோக்கியோவிற்கு தப்பிச் சென்றார்.
- அவ்வாறு செல்லும் வழியில் அவர் விமான விபத்தில் உயிர் இழந்ததாக நம்பப்படுகிறது.

**படைப்புகள்**

1. இந்தியப் போராட்டம்(1942) (The India Struggle)
2. ஒரு இந்திய சன்னியாசி
3. தேசத்தின் யோசனைகள்
4. எமிலி செங்கலுக்கு கடிதங்கள்

**பொன்மொழிகள்**

- ஜெய் ஹிந்த், டெல்லி சலோ, ரத்தத்தைக் கொடுங்கள் சுதந்தரத்தைத் தருகிறேன்.

## 4.5.சாஹீத் பகத் சிங்

**காலம்**: 28.09.1907-23.03.1931

**பிறப்பு**: ஜார்ன்வாலா, லயல்பூர் மாவட்டம், பஞ்சாப்(தற்போதைய பாகிஸ்தான்)

**பெற்றோர்**: கிஷன்சிங்-வித்யாவதி கவுர்

**சிறப்பு பெயர்**: சாகித்-இ-ஆசாம்

**வாழ்க்கை**

- இவர் தயானந்தா ஆங்கிலோ வேதிக் பள்ளியில் தொடக்கக் கல்வியையும் பின்னர் லாகூரில் அமைந்த தேசியக் கல்லூரியில் கல்லூரிப் படிப்பையும் முடித்தார்.
- பகத்சிங்கின் 14 ஆம் வயதில் ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்தது.
- 1923-கல்லூரிகளில் **பஞ்சாப் ஹிந்தி சாகித்திய சம்மேளன்** நடத்திய கட்டுரைப் போட்டியில் பஞ்சாபின் துயரங்கள் குறித்த கட்டுரைக்கு பரிசுப் பெற்றார்.
- பத்திரிக்கைகளின் பல்வந்த், இரஞ்சித் மற்றும் வித்ரோகி என்ற புனைப்பெயர்களில் கட்டுரை எழுதியுள்ளர்.
- கிர்த்தி விவசாய கட்சியின் இதழான கிர்த்தியிலும் வீர் அர்ஜீன் என்ற செய்தித்தாள்களிலும் சுருக்கக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.
- நவ்ஜவான் பாரத் சபா(1926), ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன் (HRA) ஆகிய அமைப்புகளில் தன்னை இணைத்துக்கொண்டார்.
- 1926 ஆம் ஆண்டு பஞ்சாப் நவஜிவன் சபா என்ற அமைப்பை உருவாக்கி அதன் முதல் செயலாளரானார்.
- ‘வகுப்புவாத அமைப்புகளுடன் அல்லது வகுப்புவாதக் கருத்துகளை பரப்புகின்ற பிற கட்சிகளுடன் தொடர்பு கொள்ளக்கூடாது’, ‘மதம் என்பது தனிநபர்களின் நம்பிக்கை, அதன் அடிப்படையில் அவர்கள் முழுமையாகச் செயல்படலாம் என்ற வகையில் மக்களிடையே பொதுவான சகிப்புணர்வை உருவாக்க வேண்டும்’ என்ற சபாவின் இரண்டு விதிகளையும் பகத்சிங் உருவாக்கினார்.
- 1928 இல் அதனைத் தொடர்ந்து HRA (சச்சின் சன்யால், ஜோகேஷ் சட்டர்ஜியால் உருவாக்கப்பட்டது)வானது ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் (HRSA) என்று பகத்சிங்காலும் அவரது தோழர்களாலும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவ்வமைப்புத் திருத்தியமைக்கப்பட்டது.
- ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷனின் தலைவர்களில் ஒருவராக பகத்சிங் விளங்கினார்.
- 1928 - அக்டோபர் 30 அன்று நடைபெற்ற சைமன் குழு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மீது தொடுக்கப்பட்ட மிருகத்தனமான தடியடித் தாக்குதலால் நிலைமையில் திடீர் மாற்றம் ஏற்பட்டது.
- தடியடித் தாக்குதலின் விளைவாக பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய் மரணமடைந்தார்.
- இந்நிகழ்வு இளைஞர்களை ஆத்திரம் கொள்ளச் செய்தது.
- 1928 டிசம்பர் 17 அன்று பகத்சிங், ஆசாத், ராஜகுரு ஆகியயோர் இத்தடியடிக்குக் காரணமான பிரிட்டிஷ் அதிகாரி சாண்டர்சைப் படுகொலை செய்தனர்.

- 1929 ஏப்ரல் 8 இல் பகத்சிங், பட்டுகேஸ்வர தத் (BK தத்) மத்திய சட்டமன்றத்தில் குண்டு வீசினார். அந்தக் குண்டு எவரையும் கொள்ளவில்லை.
- ராஜகுரு, சுகதேவ், ஜதீந்திரநாத் தாஸ் ஆகியோருடன் பகத்சிங்கும் மேலும் 21 பேரும் கைது செய்யப்பட்டனர்.
- "**நான் ஏன் நார்த்திகனாக இருக்கிறேன்**" - அவர் 1930 இல் லாகூர் மத்திய சிறையில் இருந்து எழுதியக் கட்டுரை. இதனை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க ப.ஜீவானந்தம் தமிழில் மொழிபெயர்த்தார்.
- 23 வயதான பகத்சிங், தான் இறுதியாக எழுதிய இரண்டு கடிதங்களில் சோசலிசத்தின் மீதான தனது நம்பிக்கையை வலியுறுத்தி உள்ளார்.
- 'விவசாயிகள் அன்னிய நுகத்தடியிலிருந்து மட்டுமல்லாமல், நிலபிரபுக்கள், முதலாளிகள் ஆகியோரின் நுகத்தடியிலிருந்தும் தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டுமென் அவர் எழுதினார்.
- 'ஒரு சிறு சுரண்டும் கூட்டத்தினர் தங்களது சொந்த ஆதாயத்துக்காக சாதாரண மக்களின் உழைப்பைச் சுரண்டிக் கொண்டிருக்கும் வரை இந்தியாவில் போராட்டம் தொடரும்.
- அத்தகைய சுரண்டலாளர்கள் முழுமையாக பிரிட்டீஷ்காரர்களா அல்லது பிரிட்டீசாரும், இந்தியர்களும் இணைந்த கூட்டாளிகளா அல்லது முழுமையாக இந்தியர்களா என்பது இதில் முக்கியமல்ல' என 1931 -ம் ஆண்டு மார்ச் 3-ம் தேதி அவர் வெளியிட்ட தனது இறுதிச் செய்தியில் குறிப்பிட்டார்.
- சோசலிசத்தை அறிவியல் ரீதியில் பகத்சிங் விளக்கினார். முதலாளித்துவத்தையும், வர்க்க மேலாதிக்கத்தையும் ஒழிப்பதே அது என அவர் விளக்கினார்.
- 1930 -க்கு முன்பே அவரும், அவரது தோழர்களும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டுவிட்டதையும் அவர் தெளிவுபடுத்தினார்.
- 'நான் ஒரு பயங்கரவாதியைப் போல செயல்பட்டேன். ஆனால் நான் ஒரு பயங்கரவாதியல்ல. எனது புரட்சிகர வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்தைத் தவிர நான் ஒருபோதும் ஒரு பயங்கரவாதியாக இருந்ததில்லை என்பதை உறுதிபடக் கூறுகிறேன். இத்தகைய வழிமுறைகளால் நாம் எதனையும் சாதித்துவிட முடியாது என்பதில் நான் உறுதியாக உள்ளேன்' என 1931 -ம் ஆண்டு பிப்ரவரி 2-ம் தேதி எழுதிய தனது இறுதி அரசியல் வாக்குமூலத்தில் பிரகடனப்படுத்தினார்.
- 1930 அக்டோபர் 7 அன்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- லாகூர் சிறைச்சாலையில் 1931 மார்ச் 23 அன்று அதிகாலையில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

## 4.6.மௌலானா அபுல் கலாம் ஆசாத்

**காலம்**: 11.11.1888-22.02.1958

**பிறப்பு**: மெக்கா, சவூதி அரேபியா

**பெற்றோர்**: முகமது கைருதின்-சேயிக்கா அலியா

**தந்தை**: புத்தக ஆசிரியர்

**சிறப்பு**: இவருடைய பிறந்த நாள் தேசிய கல்வி நாளாகக் கொண்டாடப்படுகிறது.

**வாழ்க்கை**

- இவர் இந்திய தேசிய இயக்கததின் போது இந்திய தேசிய காங்கிரஸின் மூத்த தலைவராக இருந்தார்.
- உத்தரபிரதேசத்தின் ஜாமியா மிலியா(Jamia Millia) கட்டிடத்தின் அடிக்கல் நாட்டுவதில் முக்கிய பங்காற்றினார்.
- 1934 ல் அலிகாரில் இருந்து புதுடெல்லிக்கு பல்கலைக்கழக வளாகத்தை மாற்ற காரணமாயிருந்தார்.

**விடுதலை இயக்கத்தில் இவரின் பங்கு**

- இவர் தம் இளம்வயதில் ஆங்கில ஆட்சிக்கு எதிராக தம் பத்திரிக்கை மூலம் எழுச்சியூட்டினார்.
- இவர் கிலாபத் இயக்கத்தின் தலைவரானதன் மூலம் மகாத்மா காந்தியடிகளுக்கு மிக நெருக்கமானார்.
- இவர் தன் 35வது வயதில் 1923ல் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக இருந்தார்.
- இளம் வயதில் காங்கிரஸின் தலைவராக இருந்தார். மேலும் **நீண்ட நாள் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக** இருந்தார்.
- 1931-ல் நடைபெற்ற தர்ஷணா சத்தியாகிரகத்தில் முக்கிய தலைவராக விளங்கினார்.
- **1912** -ல் வெளியிட்ட **Al-Hilal(உருது மொழி) பத்திரிக்கை மூலம் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக உழைத்தார்.**
- சுதேசி இயக்கத்தின் போது இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக இருந்தார்.
- மேலும் **நகியத்-உல்-உலேமா(1924), தேசிய முஸ்லீம் மாநாடு, சிம்லா மாநாடு(1925) ஆகியவற்றின் தலைவராக** இருந்தார்.
- அரசியலமைப்பின் உறுப்பினராக 1946-ல் தேர்ந்தெடுக்கப்பட்டு இடைக்கால அரசாங்கத்தின் கல்வி மற்றும் கலைத்துறையின் அமைச்சராக பொறுப்பேற்றார்.
- UGC,AUCTE,IIT காரக்பூர் போன்றவற்றிக்கு அடிக்கல் நாட்டினார்.
- அவர் சுதேசி தயாரிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் இந்தியாவுக்கான சுயராஜ்ஜியம் உள்ளிட்ட காந்தியின் கொள்கைக்கு உறுதியளித்தார்.
- 1923, 1940 - INC தலைவர்
- 1942 வெள்ளையனே வெளியேறு நிகழ்வின்போது அகமதுநகர் கோட்டையில் அடைக்கப்பட்டார்.

- **இந்திய கலாச்சாரத்தை உலகறியச் செய்ய Indian Council for cultural relations என்ற அமைப்பை 1950ல் ஏற்படுத்தினார்.**
- 1992ல் பாரதரத்னா வழங்கப்பட்டது.

**படைப்புகள்**

1. இந்தியா சுதந்திரத்தில் வெற்றிபெற்றது. (India Wins Freedom)
2. குபார்-இ-கதிர்(Ghubar-i-khafir)
3. தாஸ்கிராக்(Tazkirah)
4. தார்ஜீமனுல் கரான்(Tarjumanul Quran)

## 4.7.மற்றபிற தலைவர்கள்

### 1. இரவீந்திரநாத் தாகூர்

- நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமைக்கு உரியவர்.
- ரவீந்திரநாத் தாகூர் 1861ல் கல்கத்தாவில் பிறந்தவர்.
- தாகூரின் தந்தை மகரிஷி தேவேந்திர தாகூர் ஆவார். லண்டனில் கல்வி பயின்று 1880ல் பாரதம் திரும்பினார். தாகூர் 15 வயதிலேயே கவிதை எழுதத் தொடங்கினார்.
- தாகூரது முதல் கவிதைத் தொகுதி அவரது 21வது வயதில்(1882 ல்) வெளியானது.
- அம்பிரித் பஷார் பத்திரிக்கையில் முதல் தொகுதி வெளியானது.
- ரவீந்திரநாத் தாகூரை 'வங்க இலக்கியத்தின் உதயஞாயிறு' என்று பக்கிம் சந்திரரும்,'குருதேவ்' என்று மகாத்மா காந்தியும் பாராட்டியுள்ளனர்.
- வந்தேமாதரம் பாடலை முதன் முதலில் 1896 கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் பாடினார்.
- ஜாதி பாகுபாட்டையும் மேனாட்டுத் தேசியத்தின் தீமைகளையும் தீவிரமாக எதிர்த்த தாகூர் தனது ஜமீன் குடிகளுடன் அன்பாகப் பழகினார்.
- வங்காளப் பிரிவினையின்போது தாகூர் இயற்றிய அமர் சோனா பெங்காலா(1905) என்ற பாடலே தற்போது பங்களாதேஷின் தேசிய கீதமாகும்.
- மேலும் இப்பிரிவினையை எதிர்க்க இரக்ஷாப்பந்தன் விழாவை ஏற்படுத்தினார்.
- அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் சென்று சொற்பொழிவு நிகழ்த்தினார்.
- இவரது சிறந்த ஓவியராகவும் திகழ்ந்தார்.
- கீதாஞ்சலி என்ற இவரது நூல் 1913ல் நோபல் பரிசு பெற்றது.
- 1915ல் பிரிட்டிஷாரிடமிருந்து பெற்ற நைட்வுட் பட்டத்தை ஜாலியம் வாலாபாக் படுகொலையினால் துறந்தார்.
- இவர் பானபுல் (Banaphul) என்ற கதையையும், பானுசின்ஹர் பாடாவளி (Bhanusinter Padavali) என்ற கவிதைத் தொகுப்பையும் எழுதினார்.
- காந்திஜியை முதன் முதலில் மகாத்மா என்றழைத்தவர் இவரே.

- டிசம்பர் 22, 1901 போல்ப்பூரில் சாந்தி நிககேதன் கல்லூரியை தொடங்கினார்.
- சாந்தி நிகேதன் என்பதன் பொருள்:அமைதியின் உறைவிடம்.
- சாந்தி நிகேதன் கல்லாரி 1921ல் விஸ்வ பாரதி பல்கலைக்கழகமாக வளர்ந்தது.
- கவிதைகள் மட்டுமின்றி, சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், கட்டுரைகளும் நிறைய எழுதியுள்ளார்.
- உலகப்புகழ் பெற்ற எழுத்தாளர்களில் ஒருவராகப் போற்றப்பட்ட ரவீந்திரநாத் தாகூர் 1941 ஆகஸ்ட் 7 ஆம் தேதி காலமானார்.

## 2. கோபால கிருஷ்ண கோகலே

- பிறப்பு: 9 மே 1866; இறப்பு:19 பிப்ரவரி 1915
- மகாத்மா காந்தியால் 'எனது அரசியல் தலைவர் மற்றும் வழிகாட்டி, குரு' என்று புகழப்பட்டவர்.
- கோகலேவின் குரு: M.G. ராணடே.
- 1899-இல் பம்பாய் சட்டமன்ற கவுன்சில் சபைக்கு தேர்வானார்.
- 1905-ல் காசியில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகப் பொறுப்பேற்றார்.
- 1905ல் காசியில் நடைபெற்ற மாநாட்டில் வங்காள பிரிவினை எதிர்ப்பியக்கத்தை ஆதரித்ததுடன் "பேரரசுக்கு உட்பட்ட தன்னாட்சியே இந்திய தேசிய காங்கிரசின் குறிக்கோள்" என்று பேசினார்.
- வங்கப்பிரிவினையை எதிர்த்து தர்ஷன் பிரபுவை அவுரங்கசிப்போடு ஒப்பிட்டு பேசினார்.
- 1912ம் வருடம் தென் ஆப்பிரிக்கா சென்று அங்கு நிறவேற்றுமையை எதிர்த்துப் போராடி வந்த காந்திக்கு உதவி புரிந்தார்.
- அப்போது தான் "இந்தியாவிற்கு வந்து இந்திய மக்களுக்கு சேவை புரியுமாறு" காந்தியிடம் கேட்டுக் கொண்டார்.
- 1907-இல் சூரத் காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் தீவிரவாதிகள், மிதவாதிகள் என இரண்டாகப் பிரிந்தது. அதில் மிதவாதிகளின் தலைவராகத் திகழ்ந்தார்.
- 1905-இல் பூனாவில் இந்தியப் பணியாளர் சங்கத்தை தொடங்கினார்.
- இந்தியப் பணியாளர் சங்கம், நடேஸ் அப்பாஜி திராவிட், கோபால் கிருஷ்ண தியோதர், ஆனந்த் பட்வர்தன் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் பிரிட்டிஷ் ஆட்சியை அகற்றுவதும் இந்தியர்களின் சமூக மற்றும் மனித வள ஆற்றல்களை மேம்படுத்துவதும் ஆகும்.
- இதில் ஸ்ரீனிவாச சாஸ்திரி, N.M. ஜோஷி, பண்டிட் இருதயநாத் குன்ஸ்ரு போன்றோர் உறுப்பினர்களாக இருந்தார்.

- மிதவாத நோக்கத்துடன் கல்விச் சிந்தனை மூலம் இந்தியர்களை எழுச்சி அடையச் செய்த கோகலே தனது 48 ஆவது வயதில் 19 பிப்ரவரி 1915-இல் பம்பாயில் காலமானார்.
- மகாராஷ்டிராவின் அணிகலன், இந்தியாவின் வைரம், உழைப்பாளர்களின் இளவரசன் என்று கோகலேவின் மறைவின்போது திலகர் கூறினார்.

## 9. தாதாபாய் நௌரோஜி

- காலம் : செப்டம்பர் 4, 1825 - ஜூன் 17, 1930.
- 1886, 1893, 1906 ஆகிய கால கட்டங்களில் இந்திய தேசிய காங்கிரசின் தலைவர்.
- 1882 முதல் 1895 வரை ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்.
- இந்தியாவின் முதுபெரும் மனிதர், கிலாட் ஸ்டோன் (Glad stone), INC பெயரிட்டு தந்தை, மராத்திய மைந்தர், இந்திய மக்களின் உரிமைகளின் காவலன் என்று அறியப்படுகிறார்.
- தோற்றுவித்த சங்கங்கள்: லண்டன் இந்திய சங்கம்(1865), கிழக்கிந்திய கழகம்(1866)
- **படைப்புகள்**: பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும் இந்தியாவின் வறுமையும்(1901)
- **பத்திரிக்கைகள்**: இராஷ்கோப்தார் (உண்மை விளம்பி), வாய்ஸ் ஆப் இந்தியா
- இந்தியாவின் ''**கிலாட்டு ஸ்டோன்**'' என்றும் அழைக்கப்படுகிறார்.
- 1867 -ல் "**Two Wants and Means of India**" என்ற நூலையும் 1875 ல் "**On the Commerce of India**" என்ற நூல்களையும் வெளியிட்டார். "**Poverty and UnBritish urle in India"** என்ற நூல் தொகுப்பை வெளியிட்டார்.
- **1904** ல் ஆம்ஸ்டர் டாம் நகரில் நடந்த "**அகில உலக சோசலிசக் காங்கிரஸ்'' மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக தாதாபாய் கலந்து கொண்டார்.**
- 1906 இல் இவர் தலைமை வகித்த காங்கிரஸ் மாநாட்டில் முதன் முதலாக சுயராஜ்ஜியம் வலியுறுத்தப்பட்டது.
- இந்தியாவில் பிரிட்டீஷ் சுரண்டலும், அதன் செல்வத்தைக் கொள்ளை கொண்டு போனதுமே பொருளாதாரம் குறித்த தனத கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார்.
- பிரிட்டீஷ் ஆட்சியானது 'நிரந்தரமாக, அதிகரித்து வரக்கூடிய அன்றாடம் அதிகரித்து வந்த அன்னியப் படையெடுப்பு எனவும் அது நிதானமாக நாட்டின் பொருளாதாரத்தை அழித்து வருகிறது' எனவும் 1881 -ம் ஆண்டு துவக்கத்திலேயே தாதாபாய் நௌரோஜி குறிப்பிட்டார்.
- பாதுகாப்பு நலன் குறித்து தாதாபாய் நௌரோஜி பின்வருமாறு குறிப்பிட்டார்.

- ‘வாழ்க்கைப் பாதுகாப்பும், வளமும் இருந்தபோதிலும், எதார்த்தத்தில் அத்தகைய அம்சம் இல்லை என்பதுதான் அதிசயமாகும்.
- ஒரு வகையில் வாழ்க்கைப் பாதுகாப்பும், வளமும் இருந்தன. அதாவது மக்கள் ஒருவருக்கொருவர் இடையிலும் அல்லது உள்ளூர் சர்வாதிகாரிகளிடத்தில் இருந்தும் பாதுகாப்பாக இருந்தனர்.
- ஆகவே பாதுகாப்புடன் இந்தியாவின் சொத்துக்களை ஆண்டுக்கு 3 கோடி முதல் 4 கோடி பவுண்டு வரை கொள்ளையடித்துச் சென்று இந்தியாவை விழுங்கியது.
- எனவே இந்தியத் தாய் தனது சொத்துக்கும், வாழ்வுக்கும் பாதுகாப்பாக இருந்ததில்லை.
- இலட்சோபலட்சம் இந்தியர்கள் அரைகுறை உணவுடன் அல்லது பட்டினியால் அல்லது பஞ்சத்தால் நோயிலும் காலம் தள்ளினர் எனக் குறிப்பிட்டார்.
- சட்டம் ஒழுங்கு நிலை குறித்து தாதாபாய் “பிரிட்டீஷ் இந்திய சர்வாதிகார ஆட்சியின் கீழ் வன்முறை எதுவுமின்றி மக்கள் அமைதியாக வாழ்ந்து வந்தனர்.
- ஆனால் அவர்களது வாழ்வாதாரம் கண்ணுக்குத் தெரியாமல் அமைதியாகப் பறித்துச் செல்லப்பட்டது.
- அவர்கள் சட்டம் ஒழுங்கோடு அமைதியாகப் பட்டினி கிடந்து அமைதியாக மடிந்தனர்” எனக் குறிப்பிட்டார்.
- ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் சுயாட்சிக் காலனிகளை நிறுவியதைப் போல பிரிட்டீஷ் பேரரசுக்கு உட்பட்டு, சுய அரசாங்கத்துக்கான சுயராஜ்ஜியக் கோரிக்கையை முன்வைத்தனர்.
- காங்கிரஸ் மேடையிலிருந்து 1905 -ம் ஆண்டு கோகலே-வினாலும் 1906 -ம் ஆண்டு தாதாபாய் நௌரோஜியினாலும் இக்கோரிக்கை எழுப்பப்பட்டது.

## 11. சுரேந்திரநாத் பானர்ஜி (1848 - 1925)

- இந்தியாவின் முதல் ஐ.சி.எஸ். அதிகாரி.
- 1848 -ம் வருடம் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்த சுரேந்திரநாத் சிறந்த கல்வியாளராகத் திகழ்ந்தார்.
- 1876 -ல் ஜூலை 26 -ல் கல்கத்தாவில் “இந்திய சங்கம்” ஒன்றை நிறுவினார்.
- அரசுக்கு எதிராக பொதுமக்களின் கருத்துக்களை திரட்டுவதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.
- வைசிராய் லிட்டன்பிரபு இந்திய ஆட்சிப் பணி தேர்வுக்கு இருந்த அதிக பட்ச வயதான 21 ஐ 19 ஆகக் குறைத்தார்.
- இதை எதிர்த்து நாடு முழுவதும் கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்தது “இந்திய சங்கம்”
- பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த பிரதிநிதிகள் கொண்ட “இந்திய தேசிய மாநாடு” 1883-ல் கல்கத்தாவில் அமைக்கப்பட்டது.

- இதற்கிடையில் 1885 -ல் இந்திய தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பு ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவர் முயற்சியில் ஆரம்பிக்கப்பட்டது.
- இந்திய தேசியக் காங்கிரசைப் பற்றி அறிந்து கொண்ட பானர்ஜி, ஒரே நோக்கமுடைய இருவேறு அமைப்புகள் இயங்கி வருவது விரும்பத்தக்கதல்ல என்பதை உணர்ந்து சிறிதும் காலம் தாழ்த்தாமல் இந்திய தேசிய காங்கிரசுடன் இந்திய தேசிய மாநாட்டை இணைத்துவிட்டார்.
- இந்திய தேசிய காங்கிரஸின் 1895, 1902 -ம் வருட கூட்டங்களில் சுரேந்திரநாத் பானர்ஜி தலைமை தாங்கினார்.
- 1892 -ம் ஆண்டு இம்பீரியல் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1918 -ல் காங்கிரசை விட்டு விலகினார். "தேசிய லிபால் கூட்டமைப்பு" ஒன்றை அமைத்தார். இரட்டை ஆட்சியின் படி வங்காளத்தில் மந்திரி பதவி ஏற்றார்.

## தமிழ்நாட்டுத் தலைவர்கள்:

### 1. சுப்பிரமணிய பாரதி

**இயற்பெயர்**: சுப்பிரமணியம்-சுப்பையா

**காலம்**: 11.12.1882-11.09.1921

**பிறப்பு**: எட்டயாபுரம், தூத்துக்குடி

**பெற்**றோர்: சின்னச்சாமிஐயர்-லட்சமி அம்மாள்

**புனை பெயர்கள்**: காளிதாசன், சக்திதாசன், சாவித்திரி, ஓர் உத்தம தேசாபிமானி, நித்திய தீரர், ஷெல்லிதாசன்

**நடத்திய இதழ்கள்**: கர்மயோகி, பாலபாரத்(ஆங்கில இதழ்)

**சிறப்பு பெயர்**: சிந்துக்கு தந்தை

**வாழ்க்கை**

- 11 ஆம் வயதில்-பாரதி பட்டம் எட்டாயபுரம் அரசரால் வழங்கப்பட்டது.
- 1898 முதல் 1902 வரை காசியில் தங்கி இருந்தார். பின்னர் எட்டயபுரத்தின் மன்னரால் அழைத்து வரப்பட்டு அரண்மனை ஒன்றில் பாரதி பணி செய்தார்.
- மதுரையில் 1904 ஆம் ஆண்டு சேதுபதி உயர்நிலை பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றினார்.
- ஏழு ஆண்டுகள் பாட்டெழுதாமல் இருந்தபின்னர், 1904 ஆம் ஆண்டு மதுரையில் பாரதி எழுதிய பாடல் 'விவேகபானு' இதழில் வெளியானது.
- 1906 இல் பரிசால் (கல்கத்தா) காங்கிரஸ் மாநாட்டின் போது ஆங்கிலேயர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை விமர்சித்து அவர் ஒரு புத்தகத்தை வெளியிட்டார்.
- சுதேசமித்திரன் தேசியவாதிகள் செயல்பாடுகள் குறித்து, குறிப்பாக வ.உ.சி. தூத்துக்குடியில் ஆற்றிய உரைகள் பற்றி விரிவான செய்திகளை வெளியிட்டது.

- 1907 ஆம் ஆண்டு சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார்.
- 1907 மே திங்களில் பாரதியார் காங்கிரஸ் இயக்கத்தின் தீவிரவாத தலைவர்களில் ஒருவரான பிபின் சந்திரபால் என்பவரை சென்னை நகருக்கு வரவழைத்து உரை நிகழ்த்தச் செய்தார்.
- பாலகங்காதர திலகர் மற்றும் அரவிந்த்கோஷீடன் சேர்ந்து சுயராஜ்ஜியத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டார்.
- திலகர் மீது அவர் கொண்டிருந்த ஆர்வமும் பற்றும் மேலும் பெருகியது. **திலகரின் Tenets of New Party எனும் நூலை பாரதி தமிழில் மொழியாக்கம் செய்தார். மேலும் 1907 இல் சூரத் சென்று வந்த பயணம் சென்னை மாகாணத் தீவிர தேசியவாதிகள் குறித்து** எனும் சிறு புத்தகமொன்றை வெளியிட்டார்.
- விவேகானந்தரின் மாணவியான சகோதரி நிவேதிதாவை தமது குருவாகக் கருதினார்.
- 1908 ஆம் ஆண்டு, வ.உ.சிக்கு எதிராக ஆங்கில அரசு தொடர்ந்த வழக்கில் வ.உ.சி.க்கு ஆதரவாக சாட்சி வழங்கினார். இதனால் ஆங்கில அரசு இவரை கைது செய்ய ஆணை பிறப்பித்தது.
- எனவே பாரதியார் பிரெஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டிலிருந்து புதுவைக்கு தப்பி ஓடினார்.
- அங்கிருந்து தினசரி, வார இதழ் மற்றும் மாத இதழ்களில் தனது படைப்பினைத் தொடர்ந்து வெளியிட்டார்.
- தமிழில் 'சித்திராவளி' என்ற பெயரில் கருத்துப்படங்களை மட்டுமே கொண்ட இதழ் ஒன்றையும் நடத்த விரும்பினார்.
- அதைச் செயல்படுத்த முடியாவிட்டாலும் இந்தியா, விஜயா ஆகிய இரு இதழ்களிலும் கருத்துப்படங்களை வெளியிட்டுள்ளார்.
- ஆங்கில அரசு 1909 ஆம் ஆண்டு பாரதியின் படைப்புகளுக்கு தடை விதித்தது.
- முதல் உலகப்போருக்குப் பிறகு நவம்பர் 1918 ஆம் ஆண்டு பாரதியார் கடலூருக்கு வந்த சமயத்தில் கைது செய்யப்பட்டார். ஆனால் மூன்று வார காவலுக்குப் பிறகு விடுவிக்கப்பட்டார்.
- 1920 ஆம் ஆண்டு விடுதலையான பாரதியார் திருவல்லிகேணி பார்த்தசாரதி கோயில் யானையால் தாக்கப்பட்டு இயற்கை எய்தினார்.
- பாரதியாரின் நூல்கள் தமிழ்நாடு மாநில அரசினால் 1949 ஆம் ஆண்டின் நாட்டுடைமை ஆக்கப்பட்டன.
- இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமையாக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும்.
- பாரதிக்கு மகாகவி பட்டம் கொடுத்தவர் வ.ரா.(ராமசாமி ஐயங்கார்)
- பாரதியின் படத்தை வரைந்தவர் ஆர்யா என்ற பாஷ்யம்

**ஆசிரியர் பணி**

1. 1904-1906-சுதேசமித்திரன் உதவி ஆசிரியர்
2. 1905-1906-இந்தியா(வார இதழ்)
3. 1905-1906 - சக்கிரவர்த்தினி(மகளிர் வார இதழ்)
4. 1910 - சூரியோதயம்
5. 1909-1910 - கர்மயோகி
6. 1910 - தர்மம்
7. பாலபாரத யங் இந்தியா (ஆங்கில இதழ்)

**படைப்புகள்**

1. ஞானரதம்
2. சந்திரிகையின் கதை
3. தராசு
4. குயில்பாட்டு, கண்ணன்பாட்டு, பாஞ்சாலி சபதம்

## 10. பசும்பொன்.உ.முத்துராமலிங்கர்

- இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் என்னும் ஊரில் 1908-ம் ஆண்டு அக்டோபர் 30ல் பிறந்தார். தந்தை திரு. உக்கிரபாண்டியார், தயார் திருமதி இந்திராணி அம்மையார்.
- ஆசிரியர் ‘‘குறைவற வாசித்தான் பிள்ளை’’ 32 சிற்றூர்களில் தமக்குச் சொந்தமாக இருந்த நிலங்களை உழுபவர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்தார்.
- ‘‘சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை, ஆண்டவன் மனித குலத்தைப் படைத்தானே தவிரச் சாதியையும் நிறத்தையும் அல்ல. சாதியும் நிறமும் அரசியலுக்கு மில்லை. ஆன்மீகத்திற்கும் இல்லை’’ எனக் கூறியுள்ளார்.
- ‘‘தேசியம் காத்த செம்மல்’’ என்று திரு.வி.க. அவர்கள் இவரைப் பாராட்டியுள்ளார்.
- ‘‘தேசியமும், தெய்வீகமும்’’ என் இரு கண்கள் எனக் கூறினார். ‘‘வீரமில்லா வாழ்வும் விவேகமில்லா வீரமும் வீணாகும்’’ எனக் கூறியுள்ளார்.
- 1934 இல் கமுதியில் குற்றப்பரம்பரைச் சட்ட எதிர்ப்பு மாநாட்டை நடத்தினார்.
- 1936 காலகட்டத்தில் மதுரையில் 23 தொழிலாளர்கள் சங்கங்களின் தலைவராக விளங்கினார்.
- 1939-சட்டமன்றத் தேர்தலில் ராமநாதபுர மன்னர் சண்முக ராஜேஸ்வர சேதுபதியை எதிர்த்து போட்டியிட்டு வெற்றிப்பெற்றார்.(1952, 1957, 1962 தேர்தல்களிலும் வெற்றிப்பெற்றார்.)
- ஜமீன் விவசாயச்சங்கம் எனும் அமைப்பை ஏற்படுத்தினார்.
- பாரதமாதா கூட்டுறவுப் பண்டகச்சாலையை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு உறுதுணையாக இருந்தார்.
- பட்டப் பெயர்கள்: வேதாந்த பாஸ்கர், பிரணவ கேசரி, சன்மார்க்க சண்ட மாருதம், இந்து புத்த சமய மேதை.

- நேதாஜி இவரின் அரசியல் குரு மற்றும் முற்போக்கு கட்சியை(forward Bloc) தமிழ்நாட்டில் கொண்டு வந்தார். இவரின் வேண்டுதலின்படி நேதாஜி மதுரைக்கு செப்டம்பர் 6, 1939ல் வருகை தந்தார்.
- இரண்டாம் உலகப்போர் சமயத்தில் மத்திய பிரதேசத்தின் தாமோ என்னும் நகரில் உள்ள இராணுவச்சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார்.
- ‘‘பனை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு’’ எனக் கூறி ‘‘மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள்’’ எனக் குறிப்பிடுகிறார்.
- 1995-ல் நடுவண் அரசு இவருக்கு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பித்தது.
- தன் சொத்துக்களை 17 பாகங்களாக பிரித்து ஒரு பங்கை தனக்கும் மீதி 16 பாகங்களை ஏழை எளிய மக்களுக்கு எழுதி கொடுத்தார்.
- அக்டோபர் 30-1963-ல் தன்னுடைய 55 வயதில் இயற்கை எய்தினார்.
- சுத்ததியாகி என்று தந்தைப் பெரியாரால் பாராட்டப்பெற்றவர்.

## 22. ப. ஜீவானந்தம்

- வீரத்துறவி விவேகானந்தருக்குப் பிறகு இளைய சமுதாயத்தை வசீகரித்தவர் **ஜூவா** என்று அழைக்கப்படும் ப.ஜீவானந்தம்.
- நாகர்கோயிலை அடுத்த பூதம்பாண்டி என்ற கிராமத்தில் **1907 -**ம் ஆண்டு ஆகஸ்ட் **21-**ம் தேதி பட்டப்பிள்ளை, உமையம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார்.
- பெற்றோர் இவருக்கு இட்டப்பெயர் சொரிமுத்து.
- பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது “சுகுணராஜன் அல்லது சுதந்தரவீரன்” என்ற நாவலை எழுதினார்.
- வ.வே.சு. ஐயர் நடத்திய **தேசிய குருகுலத்தில்** இளம் வயதிலேயே ஜீவானந்தம் ஆசிரியர் பணி ஏற்றிருந்தார். அந்த ஆசிரமம் மூடப்பட்ட பிறகு காரைக்குடிக்கு அருகில், சிராவயல் என்ற ஊரில் **காந்தி ஆசிரமத்தை** உருவாக்கினார்.
- 1933 -ல் ஜீவா எழுதிய **‘‘பெண்ணுரிமை கீதாஞ்சலி’’** என்ற கவிதை நூல் வெளிவந்தது. இதுதான் ஜீவா எழுதிய முதல் நூலாகும்.
- தமது கொள்கையை பரப்ப 1937 -ல் **‘‘ஜனசக்தி’’** நாளிதழைத் தொடங்கியது. ஜீவா, **‘‘தாமரை’’** என்ற இலக்கிய இதழை 1959 -ல் தொடங்கினார்.
- வைக்கம் சத்தியாகிரகம், சுசீந்திரம் தீண்டாமை இயக்கம், சுயமரியாதை இயக்கம் போன்றவைகளில் பங்கேற்றார்.
- **தொழிலாளர் பாதுகாப்புக் கழகம்** எனும் பெயரில் கம்யூனிஸ்டுகள் உருவாக்கிய அமைப்பின் மூலம் பல்வேறு தொழிற்சங்க அமைப்புகள் உருவாயின. இவற்றின் மூலம் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடினர்.

- **1948 -**ல் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டபோது இலங்கைக்குச் சென்று செயல்பட்டார்.
- ஜீவா எழுதிய **"சோசலிசச் சரித்திரம்"** மற்றும் **"சோசலிசத் தத்துவம்"** எனும் சிறு நூல்களைத் தொடர்ந்து அத்துறை சார்ந்த சோவியத் நூல்கள் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டன.
- காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி மற்றும் அதன் தொழிலாளர் பாதுகாப்புக் கழகம், சுயமரியாதை சமதர்மக் கட்சி ஆகியவற்றில் தலைமைப் பொறுப்பேற்க வேண்டிய சூழல் ஜீவாவிற்கு உருவானது.
- **"சமதர்மம்", "அறிவு", "ஜனசக்தி"** ஆகிய இதழ்களின் ஆசிரியர் பொறுப்பையும் இக்காலங்களில் ஏற்றிருந்தார்.
- ஈ.வெ.ராவோடு கருத்து முரண் ஏற்பட்ட சூழலில் தோழர்கள் அ.ராகவன், நீலாவதி, இராமநாதன் உள்ளிட்டவர்களோடு இணைந்து **"சுயமரியாதை சமதர்மக் கட்சி"**யை உருவாக்கினார். அவ்வியக்கத்தின் இதழ்களாக **"சமதர்மம்"**மற்றும் **"அறிவு"** ஆகியவை செயல்பட்டன.
- அக்கட்சியின் முதல் மாநாடு திருச்சியில் நடைபெற்றது (1936). **டாங்கே** அம்மாநாட்டின் தலைமையுரையை நிகழ்த்தினார்.
- 1963 -ம் ஆண்டு ஜனவரி 18 -ம் தேதி ஜீவா மரணமடைந்தார்.

**மாதிரி வினாத்தாள்**

1. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படி அமைக்கவும்:

   1. இந்திய சுதந்திரம் குறித்த அட்லியின் அறிவிப்பு
   2. நேருவின் தலைமையிலான இடைக்கால அரசாங்கம்
   3. மௌண்ட் பேட்டன் திட்டம்
   4. நேரு லியாகத் அலிகான் ஒப்பந்தம்

   A. 2 1 3 4 B. 1 2 3 4 C. 4 3 2 1 D. 2 4 3 1

   E. விடை தெரியவில்லை

2. வி.டி. சவார்கரால் ஆரம்பிக்கப்பட்ட ரகசிய சங்கம் என அழைக்கப்படுவது?

   A. இந்திய சங்கம் B. அபிநவ் பாரத் C. பாரத சங்கம்

   D. யுவபாரதம் E. விடை தெரியவில்லை

3. பின்வரும் தொடர்களில் சரியான காலவரிசை தொடர் எது?

   A. சுதேசி இயக்கம், தன்னாட்சி சங்கம், சைமன் குழு, இந்திய தேசிய இராணுவம்.

   B. தன்னாட்சி சங்கம். சுதேசி இயக்கம், சைமன் குழு, இந்திய தேசிய இராணுவம்.

   C. சுதேசி இயக்கம், தன்னாட்சி சங்கம், இந்திய தேசிய இராணுவம், சைமன் குழு.

   D. சுதேசி இயக்கம், சைமன் குழு, தன்னாட்சி சங்கம், இந்திய தேசிய இராணுவம்.

   E. விடை தெரியவில்லை

4. காலவரிசைப்படுத்துக.

   1. சூரத் பிளவு
   2. வங்காள பிரிவினை
   3. மின்டோமார்லி சீர்திருத்தம்
   4. இந்திய முஸ்லீம் லீக்

   A. 4 2 1 3 B. 2 4 1 3 C. 1 3 2 4 D. 1 2 3 4

   E. விடை தெரியவில்லை

5. சமுதாய சீர்திருத்தவாதிகள் 18 ஆம் நூற்றாண்டின் முதல் அரை நூற்றாண்டு காலத்தில் ஏன் அதை ஒரு இயக்கமாக உருவாக்கத் தவறிவிட்டனர்?

i) சமுதாய நிலை தகுந்தாற்போல் இல்லை.

ii) அவர்களுக்கு வேறு எந்த பிரிவினரும் ஆதரவளிக்கவில்லை.

iii) அவர்கள் சிலை வழிபாட்டை எதிர்த்தனர்.

A. i மற்றும் ii B. i மட்டும் C. i,ii மற்றும் iii D. iii மட்டும்

E. விடை தெரியவில்லை

6. பொருத்துக:

a. சைமன் குழு - 1. 1928

b. நேரு அறிக்கை - 2. 1932

c. இரண்டாவது வட்டமேசை மாநாடு - 3. 1927

d. வகுப்புவாரி முறை - 4. 1931

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 1 | 4 | 2 | 3 |
| B | 3 | 1 | 4 | 2 |
| C | 4 | 3 | 2 | 1 |
| D | 3 | 2 | 4 | 1 |

E. விடை தெரியவில்லை

7. எங்களுடைய நிலை அனைத்து மதங்களிலும் உண்மைகள் இருந்ததாக வேண்டும் என்பதல்ல, ஆனால்

உலகத்தில் நிறுவப்பட்ட அனைத்து மதங்களும் உண்மையானவையே என்று கூறியவர்?

A. இராஜாராம் மோகன்ராய் B. தேவேந்திரநாத்தாகூர்

C. கேசவ் சந்திரசென் D. இராமகிருஷ்ண பரமஹம்சர்

E. விடை தெரியவில்லை

8. இந்திய தேசிய காங்கிரசின் தலைவர்களை காலவரிசையில் வரிசைப்படுத்துக:

1. ஜார்ஜ் யூல் 2. வில்லியம் வெட்டர்பர்ன்

3. தாதாபாய் நெளரோஜி 4. சையத் பக்ருதின் தியாப்ஜி

A. 4 2 1 3 B. 3 4 1 2 C. 1 3 2 4 D. 1 2 3 4

E. விடை தெரியவில்லை

9. கூற்று : வ.உ. சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தை தொடங்கினார்.

காரணம் :இந்தியக் கடற்கரையில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்.

A. கூற்று மற்றும் காரணம் சரி, சரியான விளக்கம்

B. கூற்று (ம) காரணம் சரி ஆனால் சரியான விளக்கமல்ல

C. கூற்று சரி காரணம் தவறு

D. கூற்று தவறு காரணம் சரி

E. விடை தெரியவில்லை

10. எந்த இணை சரியாக பொருந்தவில்லை.

A. பணியாளர் தேர்வு வாரியம் - 1924

B. ஆந்திரா பல்கலைக்கழகம் - 1925

C. அண்ணாமலை பல்கலைக்கழகம் - 1929

D. இந்துசமய அறநிலையச் சட்டம் - 1936

E. விடை தெரியவில்லை

Answer Key:

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | A | B | A | B | C | B | A | D |